# இயக்குநரான ஒரு சாஃப்ட்வேர் இன்ஜினியர்!







"தியேட்டர்கள் தான் எனக்குப் பள்ளிக்கூடம். ஒவ்வொரு படமும் எனக்குப் பாடம். அந்தப் பாடங்கள் தந்த தைரியம்தான் யாரிடமும் வேலை செய்யாமல் தனியாக ஒரு படத்தை இயக்கும் நம்பிக்கையை எனக்குள் விதைத்துள்ளது!" -உற்சாகமாக ஆரம்பிக்கிறார் ராஜு.

மதுரையில் பிறந்த சாஃப்ட்வேர் இன்ஜினியர்.

"சினிமாவைப் பொறுத்தவரை, மதுரை சென்ட்ரல் தியேட்டர்தான் என்னோட முதல் பள்ளிக்கூடம்! அங்கே பார்த்த ஏகப்பட்ட படங்கள்தான் எனக்கே தெரியாமல் என்னுள் சினிமாவுக்கான கனவுகளை ஒளித்துவைத்தன. 'ப்ளஸ் டூ'வில் ஸ்டேட் ரேங்க் வாங்கின பிறகு, 'பிட்ஸ் பிலானி'யில் படித்தேன்.



ராஜு

ஆனந்த விகடன்

அதன் பிறகு, அமெரிக்காவில் வேலை, கல்யாணம்னு வாழ்க்கை சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனாலும், உள்ளுக்குள் ஒரு தேடல்! ஏதோ ஒன்றை இழந்துவிட்ட மாதிரியான உணர்வு! அமெரிக்க தியேட்டர்களில் தமிழ் சினிமாக்களைப் பார்க்கப் பார்க்கத்தான் எனக்குள் ஒளிந்திருந்த சினிமா ஆசை, மீண்டும் மெள்ள எட்டிப் பார்த்தது. குறும்படங்கள் இயக்க ஆரம்பித்தேன்.



ஒரு கட்டத்தில் தடாலடியாக முடிவெடுத்து, வேலையை ராஜினாமா செய்துட்டு இந்தியா வந்துட்டேன். என் அண்ணன் அஜய் சந்திரனோடு சேர்ந்து மலையாளத்தில் 'ஆனந்த பத்ரம்', 'சோட்டா மும்பை' என இரண்டு படங்கள் தயாரித்தேன். அதில் 'ஆனந்த பத்ர'த்தை சந்தோஷ்சிவன் இயக்கினார். படத்துக்கு மொத்தம் 13 விருதுகள் கிடைத்தன. 'சோட்டா மும்பை'யில் மோகன்லால் நடித்திருந்தார். அந்தப் படமும் சூப்பர் ஹிட்!

ஒரு படத்தை இயக்குவதற்கான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் இந்தப் படங்கள் எனக்குக் கொடுத்தன. தமிழில் நானே தயாரித்து இயக்கும் முதல் படம் 'வர்ணம்'! சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் சாதி உணர்வுகளால் 16 வயதுப் பையன் ஒருவனின் வாழ்க்கை எந்த அளவுக்குச் சிக்கல் ஆகுது என்பது தான் படத்தின் ஒன் லைன்!

சின்னாளப்பட்டியில் வாலிபால் விளையாடிக்கொண்டு இருந்த கிரியைப் பார்த்ததும் அவன்தான் எங்க ஹீரோ 'மணி'னு தீர்மானிச்சுட்டோம். அஸ்வதா சென்னைப் பொண்ணு. ஆனா, பக்கா பட்டிக்காட்டுப் பொண்ணாவே தன்னை மாத்திக்கிட்டாங்க. 'அழகி' படத்தில் பள்ளி மாணவியா வந்த மோனிகாவுக்கு இந்தப் படத்தில் டீச்சர் ப்ரமோஷன்!

ரொம்ப நம்பிக்கையோட களம் இறங்கியிருக்கேன். 'காதல்', 'பருத்திவீரன்' மாதிரியான படங்களின் வெற்றிதான் எனக்கான எதிர்கால நம்பிக்கை!" என்கிறார் ராஜு.

- மை.பாரதிராஜா